**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் நாள் திங்கள்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், கார்த்திகை திங்கள் 15ம் நாள்

**இடைக்கால மனு எண். 522/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 258/2020**

E.பாலாமணி ..மனுதாரர்/ வாதி

..எதிராக..

1. R.சாமிநான்
2. S. பாலசுப்பிரமணியம்
3. S.யுவராஜ்
4. P.செந்தில்
5. S.தமிழ்செல்வி
6. N. கனகசாமி
7. P. ஈஸ்வரி
8. கந்தசாமிநாடார் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 18.11.2025 ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.A.பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 1–3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமசாமி அவர்கள் முன்னிலையாகியும், 4,6,7,8 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகியும் நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## உத்தரவு

1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 7 பிரிவு 14(3) ன் கீழ் அசல் வழக்கின் தாவாவை நிராகரிக்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது மனு ஆவணங்கள் மனுதாரர் வசம் இல்லை. பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சான்றிட்ட நகல் தற்போது தான் கிடைக்கப்பெற்றது. எனவே மனு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 3ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு 1,2 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் ;**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் கோரிய காரணம் ஏற்கத்தக்கதல்ல. 20.10.1982ம் தேதியிட்ட ஆவணம் குறித்து வழக்குரையில் சொல்லப்படவில்லை. மனு ஆவணத்தை தாக்கல் செய்வதன் மூலம் மனுதாரர் புதிய சங்கதியை வெளிப்படுத்துகிறார். வழக்குரையில் இல்லாத சங்கதியை பொறுத்து ஆவணம் தாக்கல் செய்ய இயலாது என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. 5ம் எதிர்மனுதார் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு ஆவணமானது 1982ம் ஆண்டு ஏற்பட்டுள்ளதால் அசல் வழக்கில் வழக்குரை தாக்கல் செய்தபோது

மனுதாரருக்கு மேற்படி ஆவணம் குறித்து நன்கு தெரிந்துள்ளது. இவ்வாறான நிலையில் அசல் வழக்கு தாக்கல் செய்தபோது மனு ஆவணத்தை தாக்கல் செய்யாமல் அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

7. **<u>தீர்வு</u> :–**

**7.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**7.2** 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணத்தை பற்றி மனுதாரர்/வாதி வழக்குரையில் குறிப்பிடாததாலும், மனு ஆவணம் அசல் வழக்கிற்கு தொடர்பற்றது என்பதாலும், தகுந்த காரணங்களுடன் இம்மனு தாக்கல் செய்யப்படாததாலும் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**7.3** 5ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கு தாக்கல் செய்தபோதே 1982ம் ஆண்டு ஏற்பட்டுள்ள மனு ஆவணத்தை இணைத்து தாக்கல் செய்யாமல் அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**7.4** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது தாவா வண்டிப்பாதை உரிமை குறித்து விளம்புகை மற்றும்

செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இருதரப்பிற்கும் அவரவர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளித்து அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI
Date: 2025.12.01 15:01:26 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI
Date: 2025.12.01 15:01:31 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.